வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 22.05.2026 வெள்ளிக்கிழமை | இதழ் : 136 | பக்கங்கள் : 08

# சகல அரசியல்வாதிகள் மீதும் மக்களுக்குக் கடும் அதிருப்தி!

## பேராயர் மல்கம் ரஞ்சித் சுட்டிக்காட்டு

கொழும்பு, மே. 22

"அரசியலில் கொள்கையற்றவர்கள், பொய்களை பரப்புபவர்கள் மற்றும் சமூகத்தை மாசுபடுத்தும் செயல்களில் ஈடுபடுபவர்கள் அதிகரித்துள்ளனர். இதனால் அரசியல் மீதான மக்களின் வெறுப்பு-அதிருப்தி அதிகரித்துள்ளது."


-இவ்வாறு தெரிவித்துள்ளார் கொழும்பு பேராயர் கார்டினல் மல்கம் ரஞ்சித் ஆண்டகை.

நீர்கொழும்பில் உள்ள பிட்டிபன்ன மகாவித்தியாலயத்தின் 125ஆவது ஆண்டு நிகழ்வில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"அரசியல்வாதிகள் குறைந்தபட்சம் தாங்கள் அணியும் ஆடைகளுக்காவது மரியாதை காட்ட வேண்டும். அனைத்து அரசியல்வாதிகளாலும் நாம் வெறுப்படைந்துள்ளோம்" என்று அவர் கூறினார்.

"ஒருகாலத்தில் ஒரு அரசியல் தரப்பைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றவர்களை திருடன் என அழைத்தனர். ஆனால் இன்று, மற்றவர்களை திருடன் எனக் கூறியவர்களே திருடர்களாக மாறியிருக்கின்றனர் போல தெரிகிறது" என்றும் அவர் குறிப்பிட்டார்.

07



## திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தை யாழ்.மாநகர சபையிடம் கையளிக்குக!

### தமிழரசுக் கட்சி கோரிக்கை

யாழ்ப்பாணம், மே. 22

இந்திய - இலங்கை அரசாங்கங்கள் செய்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தை யாழ் மாநகர சபையிடம் கையளிக்க வேண்டும் என இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மைய விவகாரம் தொடர்பாக நேற்று யாழ்ப்பாணத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே இதனை தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

07

## நெடுந்தீவு மக்களின் போக்குவரத்துக்கு துரிதமாக தீர்வு வழங்கப்படவேண்டும்!

### ஜனாதிபதியிடம் டக்ளஸ் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே. 22

படகுகள் பழுதடைந்ததால் போக்குவரத்து சேவை பாதிப்பால் பல்வேறு இடையூறுகளை நாளாந்தம் எதிர்கொண்டுவரும் நெடுந்தீவு மக்களின் போக்குவரத்து சேவையை சீராக கொண்டுசெல்ல ஜனாதிபதி துரித நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை விடுத்துள்ளார்.

07

## சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து மே 27 இற்குள் 700 மில்லியன் டொலர்!

### பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ



கொழும்பு, மே. 22

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து எதிர்வரும் மே 27ஆம் திகதிக்குள் குறிப்பிடத்தக்க அளவிலான வெளிநாட்டு நிதி உதவி இலங்கைக்குக் கிடைக்கும் என நிதி இராஜாங்க அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

எதிர்வரும் 27ஆம் திகதி சர்வதேச நாணய

07

## தமிழரைத் தேசிய இனமாக ஏற்றால் தான் நாட்டில் உண்மையான சமாதானம் மலரும்!

### சிறீதரன் எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, மே. 22

இலங்கையில் தமிழ் மக்கள் ஒரு தனித்துவமான தேசிய இனம் என்பதையும், அவர்களின் பூர்வீக நிலம் மற்றும் உரிமைகளையும் தென்னிலங்கை ஆட்சியாளர்கள் ஏற்றுக்கொண்டு மதிக்கும்போதே இந்த நாட்டில் உண்மையான சமாதானம் ஏற்படும் என்று இலங்கைத்

07



## தையிட்டி பவானி வீதி வழக்கு; ஜூன் 25 ஆம் திகதி கட்டளை

யாழ்ப்பாணம், மே. 22

தையிட்டியில் சட்டவிரோத விகாரை அமைந்துள்ள காணிக்குள் கையகப்படுத்தப்பட்டுள்ள பிரதேச சபைக்கு சொந்தமான வீதியை மீட்கும் நடவடிக்கையை பிரதேச சபை கைவிடவேண்டும் என பலாலி பொலிஸார் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்குக்கான கட்டளை எதிர்வரும் ஜூன் மாதம் 25ஆம் திகதி வழங்கப்படும் என நீதிமன்று திகதியிட்டுள்ளது.

குறித்த கட்டளை நேற்று வழங்கப்படும் எனக்

07

## பொலிஸ் நிலையத்தில் முன்னிலையாகுமாறு விமல் வீரவன்ஸவுக்கு உத்தரவு

கொழும்பு, மே. 22

பாராளுமன்ற வளாகத்துக்கு அருகிலுள்ள போர்வீரர் நினைவுத் தூபிக்கு அருகில் கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்ற சம்பவம் தொடர்பில், வாக்குமூலம் அளிப்பதற்காகத் தலங்கம பொலிஸ் நிலையத்தில் இன்று முன்னிலையாகுமாறு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸவுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

தலங்கம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

07

## ஆசியாவிலேயே மிக மோசமான வீழ்ச்சி கண்ட இலங்கை ரூபாய்!

கொழும்பு, மே. 22

மே மாதத்தில் ஆசியாவிலேயே மிக மோசமான செயல்திறனைக் கொண்ட நாணயமாக இலங்கை ரூபாய் பதிவாகியுள்ளதாக சர்வதேச வர்த்தக ஊடகமான புளூம்பேர்க் செய்தி வெளியிட்டுள்ளது.

அந்நியச் செலாவணி சந்தையில் ஏற்பட்டுள்ள திடீர் மாற்றங்கள் மற்றும் முதலீட்டாளர்களின் போக்கினால் ரூபாயின் பெறுமதிக்கு இந்த கடுமையான சரிவு ஏற்பட்டுள்ளதாக பொருளாதார ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இலங்கை ரூபாயின் திடீர் வீழ்ச்சிக்கு உள்நாட்டு இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களின் வர்த்தக நடவடிக்கைகளே பிரதான காரணங்களாகக் கூறப்படுகின்றன. உள்நாட்டு இறக்குமதியாளர்கள் சந்தையில் அமெரிக்க டொலர்களை வாங்குவதைக் கணிசமாக அதிகரித்துள்ளனர்

நாட்டின் ஏற்றுமதியாளர்கள் தங்களுக்குக் கிடைக்கும் வெளிநாட்டு நாணய வருவாயை உடனுக்குடன் இலங்கை ரூபாயாக மாற்றுவதைத் தவிர்த்து, காலதாமதம் செய்து வருகின்றனர்.

சந்தையில் டொலருக்கான தேவை அதிகரித்த போதிலும், அதற்கேற்ற விநியோகம் கிடைக்காததால் இந்த நாணய நெருக்கடி தீவிரமடைந்துள்ளது.

(அ)

## தமிழ் அரசியல்கைதிகள் விடுதலை உறுதியான நிலைப்பாடு வேண்டும்!

### சபையில் சாணக்கியன் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, மே. 22

தமிழ் அரசியல்கைதிகள் விடுதலை மற்றும் பொறுப்புக்கூறல் விவகாரம் தொடர்பில் அரசாங்கம் உறுதியான நிலைப்பாட்டை அறிவிக்கவேண்டும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற அமர்வின்போது நிலையியற்

07

## ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் விசாரணை முற்றிலும் அரசியலாக்கப்படுகின்றது!

### நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 22

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணை நடவடிக்கைகளை தற்போதைய அரசாங்கம் தீவிரமாக அரசியலாக்கி வருவதாக பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.

பத்தரமுல்லயில் உள்ள பொதுஜன பெரமுன

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அத்தியாவசிய பொருள்களின் விலை அதிகரிக்கும் அபாயம்!

## இறக்குமதியாளர்கள் சங்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, மே. 21

அரிசி, பருப்பு, சீனி, வெங்காயம், உருளைக் கிழங்கு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிப்பதற்கான வாய்ப்பிருப்பதாக அத்தியாவசிய உணவுப்பொருள்கள் இறக்குமதியாளர்கள் சங்கத்தினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இறக்குமதி செய்யப்பட்ட பெருந்தொகை அரிசி விடுவிக்கப்படாமல் தேக்கமடைந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கப்பல் கட்டணம் உள்ளிட்ட கட்டணங்கள் அதிகரிக்கும் பட்சத்தில் எதிர்வரும் நாள்களில் ஒரு கிலோ பருப்பின் விலை 275 - 280 ரூபா வரையிலும் வெங்காயம் 200 ரூபா வரையிலும் உருளைக்கிழங்கு 180 ரூபா வரையிலும் அதிகரிப்பதற்கான வாய்ப்பிருப்பதாக அத்தியாவசிய உணவுப் பொருட்களின் இறக்குமதியாளர்கள் சங்கத்தின் செயலாளர் பீ. சுப்ரமணியம் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த ஒன்றரை வருடமாக சீனிக்கான செலவு 205 ரூபாவாக இருந்தாலும் ரூ.190 மற்றும் 192 ரூபாவுக்கே விற்பனை செய்தோம். அண்மையிலேயே 195 ரூபாவுக்கு சீனிக்கான விலையை அதிகரித்தோம். தற்போது வரையில் நட்டத்தையே சந்தித்து வருகிறோம்.

சிறு தொகை சீனியை இறக்குமதி செய்யமுடியாது. குறைந்தது 500 தொன் சீனி தொகையாவது இறக்குமதி செய்யவேண்டும். வங்கிக் கடனுக்கான வட்டி அதிகரிக்கும் என்பதால் பொருள் தொகையைக் களஞ்சியப்படுத்தாமல் விரைவாக விற்பனை செய்து நிறைவு செய்துவிடுவோம்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வரை இந்தியாவிலிருந்து சீனி இறக்குமதி செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள நிலைமையில் பிரேஸிலில் இருந்தே சீனி இறக்குமதி செய்ய முடியும். தற்போது கொள்முதலுக்கான கோரிக்கையை முன்வைத்தாலும் பொருள் நாட்டை வந்தடைய குறைந்தது இரு மாதங்களாவது ஆகும். இருப்பிலுள்ள பொருள்களையே விற்பனை செய்ய வேண்டி ஏற்படும். செலவு அதிகரிப்பால் நட்டத்தைச் சந்திக்க நேர்ந்துள்ளது.

எது எவ்வாறாக இருந்தாலும், பொருள்களின் விலையை அதிகரிக்கப்போவதில்லை. நட்டத்தை ஈடு செய்யவேண்டுமெனில் ஓரளவு விலை அதிகரிப்பைச் செய்தே விற்பனை செய்ய வேண்டும். அதனால் ஓரளவு விலை அதிகரிப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு இருக்கிறது.

பருப்பு 260 ரூபாவுக்கு விற்பனை செய்தோம். அதன் பின்னர் நாட்டில் பருப்புக்கு தட்டுப்பாடு ஏற்பட்டதைத் தொடர்ந்து 310 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது. மீண்டும் பருப்பு 225 - 230 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. ஆனால், தற்போதுள்ள நிலைமையில் பருப்புக்கான விலையும் அதிகரிப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது.

ஏற்றுமதிக் கட்டணம், கப்பல் கட்டணம் அதிகரிக்கும் பட்சத்தில் விலை அதிகரிப்பும் ஏற்படும். இந்தியாவிலிருந்து அரிசியை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் அனுமதியளித்திருந்தது. 1,65,000 மெற்றிக் தொன் அரிசி தொகையை இறக்குமதி செய்து நிறைவு செய்துவிட்டோம். பொருள் தொகையாக வந்துள்ளதால் விலை குறைந்துள்ளது.

அதனால், நட்டத்தின் அடிப்படையில் விற்பனை செய்யாமல் அரிசித் தொகையை இருப்பில் வைக்க விற்பனையாளர்கள் நடவடிக்கை எடுத்துள்ளார்கள். அதன் பின்னர் வந்த பொருள்களை நிதிப்பற்றாக்குறையால் விடுவித்துக்கொள்ள முடியாது போனது. ஏற்றுமதியாளர்களிடமிருந்து கடன்பெற்றே பொருள்களை விடுவித்துக்கொண்டோம்.

45 நாள்கள் கழித்து அவர்களுக்கான கடன்தொகையை மீளச் செலுத்தும்போது டொலர் பெறுமதி எவ்வளவு அதிகரிக்கும் என்பதைக் கூற முடியாது. இதனால் அரிசி இறக்குமதிக்கான செலவு அதிகரிக்கும்

உருளைக்கிழங்கு, வெங்காயம் போன்ற அத்தியாவசியப் பொருள்களின் விலையிலும் சிறு சிறு மாற்றங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. பாசிப்பயறு, உளுந்து, கௌப்பி போன்ற பொருள்களின் விலையிலும் மாற்றம் ஏற்படலாம்-என்றார்.

(அ)

# இந்த ஆண்டில் மட்டுமே 128 யானைகள் மரணம்!

கொழும்பு, மே. 22

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 128 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதாக வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அவற்றுள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களினால் 20 காட்டு யானைகளும் மின்சாரம் தாக்கியதால் 15 யானைகளும் பட்டாசு வெடிப்பினால் 10 யானைகளும் விவசாயக் கிணறுகளுக்குள் விழுந்ததால் 05 யானைகளும் உயிரிழந்துள்ளன.

இவற்றுக்கு மேலதிகமாக விசம் உட்கொண்டமை, ரயில்களில் மோதியமை மற்றும் நீரில் மூழ்கியமை போன்ற விபத்துக்களினாலும் காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொலனறுவை, அனுராதபுரம் பிராந்தியங்களிலேயே இம் மரணங்கள் பதிவாகியுள்ளன.

மேலும் காட்டு யானைகளின் தாக்குதல்களினால் இதுவரை காலப்பகுதியில் 35 மனிதர்கள் உயிரிழந்துள்ளதாக வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# தமிழ் இனப்படுகொலை எங்குமே நடக்கவில்லை!

## சிங்கள ராவய அமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, மே. 22

இலங்கையில் எங்குமே தமிழ் இனப்படுகொலை நடக்கவில்லை என சிங்கள ராவய அமைப்பின் பொதுச் செயலாளர் துபாஷண பிரபாத் ரனஹன்ச தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் எங்குமே தமிழ் இனப்படுகொலை நடக்கவில்லை. ஒருவேளை அப்படி நடந்திருந்தால், இன்று வெள்ளவத்தையில் தமிழ் மக்கள் இவ்வளவு நிம்மதியாக வாழும் சூழ்நிலையோ அல்லது கொழும்பில் வர்த்தகங்களைச் செய்யும் வாய்ப்போ யுத்த காலத்திலும் அதற்குப் பிறகும் கிடைத்திருக்காது. ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளில் பௌத்த சிலைகள் உடைக்கப்பட்டு, பௌத்தர்கள் படுகொலை செய்யப்பட்டதே உண்மையான இனப்படுகொலை ஆகும். இலங்கையில் நடந்தது பயங்கரவாத ஒழிப்பு மட்டுமே.

சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என இந்த நாட்டின் ஒட்டுமொத்த மக்களுக்கும் பயங்கரவாதத்திலிருந்து சுதந்திரத்தைப் பெற்றுத் தந்தது நமது மனிதாபிமான இராணுவமே.

நாட்டின் தற்போதைய ஜனாதிபதி முன்பு இராணுவத்தினரை "சிப்பாய்கள்" என்று அழைத்த போதிலும், இந்த மகா சமூகத்தின் சிங்கள பௌத்தர்களின் சக்தியால் அவரை "ரணவிருக்கள்" என்று வாயார அழைக்க வைத்துள்ளோம். இந்த நாட்டின் இறையாண்மையைப் பாதுகாக்கவும், ரணவிருக்களின் தியாகத்தை மதிக்கவும் உயிரைத் தியாகம் செய்யத் தயாராக இருக்கிறோம்-என்றார்.

(அ)

# லொத்தர் விற்பனையாளர்களின் பிள்ளைகளுக்கு கல்வி நிதியுதவி

கொழும்பு, மே. 22

குறைந்த வருமானம் பெறும் லொத்தர் விற்பனையாளர்களின், பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் வகையில், மாதாந்த கல்வி நிதியுதவி வழங்குவது குறித்து ஜனாதிபதி நிதியம் கவனம் செலுத்தியுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில், ஜனாதிபதி நிதியத்தின் செயலாளரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளருமான ரோஷன் கமகே மற்றும் தேசிய லொத்தர் சபை, அபிவிருத்தி லொத்தர் சபை ஆகியவற்றின் அதிகாரிகளுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி நிதியத்தின் மூலம் தற்போது பல்வேறு துறைகளை உள்ளடக்கிய வகையில் குறைந்த வருமானம் பெறுவோருக்கு நிதியுதவிகள் வழங்கப்பட்டு வருவதுடன், பாடசாலையில் கல்வி கற்கும் பிள்ளைகளுக்காக பல்வேறு நிதியுதவித் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

அதன் மற்றுமொரு கட்டமாக, குறைந்த வருமானம் பெறும் லொத்தர் விற்பனையாளர்களின் பிள்ளைகளுக்கு கல்வி நிதியுதவி வழங்க ஜனாதிபதி நிதியத்தின் நிர்வாக சபையின் அனுமதி கிடைத்துள்ளது.

ஜனாதிபதி நிதியத்திற்கு நிதியளிப்பதில் லொத்தர் சபைகள் பாரிய பங்களிப்பை வழங்குகின்றன.

எனினும், லொத்தர் சபைகளுக்கு அந்த வருமானத்தை ஈட்டித் தருவதற்காக அர்ப்பணிப்புடன் செயல்படும் லொத்தர் விற்பனையாளர்களின் வாழ்க்கைத் தரம் எப்போதும் மாறாமல் இருப்பது குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், அவர்களது சேவையைப் பாராட்டுவதற்கும், வாழ்க்கைச் சுமைக்கு கைகொடுப்பதற்கும் ஜனாதிபதி நிதியம் கவனம் செலுத்தியுள்ளது.

அதன்படி, குறைந்த வருமானம் பெறும் லொத்தர் விற்பனையாளர்களின், பாடசாலையில் கல்வி கற்கும் பிள்ளைகளுக்கு ஜனாதிபதி நிதியம் கல்வி நிதியுதவி வழங்குவதற்காக முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரை குறித்து இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டதுடன், அதற்காகத் தங்களது பங்களிப்பை வழங்குவதற்கு தேசிய லொத்தர் சபை மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபை ஆகியவற்றின் அதிகாரிகள் தமது விருப்பத்தை தெரிவித்தனர்.

பிரதேச செயலகங்கள் ஊடாக இந்த கல்வி நிதியுதவித் திட்டத்தை விரைவாக நடைமுறைப்படுத்துவதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

# கட்டாய உழைப்புச் சுரண்டலை முழுமையாக ஒழிக்க நடவடிக்கை

கொழும்பு, மே. 21

இலங்கையில் கட்டாய உழைப்புச் சுரண்டல் முறையை முழுமையாக ஒழிப்பதற்கும், அது குறித்த விழிப்புணர்வை சமூகத்தில் ஏற்படுத்துவதற்கும் "கட்டாய உழைப்பு தடுப்பு விசேட பணிக்குழு" ஒன்றை அமைப்பதற்கு தொழில் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

தொழில் அமைச்சின் செயலாளர் எஸ்.எம். பியதிஸ்ஸ தலைமையில் அமையவுள்ள இப்பணிக்குழுவானது, தொழிலாளர் திணைக்களம், பொலிஸ் திணைக்களம் மற்றும் தேசிய மனித கடத்தல் தடுப்பு பணிக்குழு ஆகியவற்றுடன் இணைந்து கூட்டாகச் செயற்படவுள்ளது.

அலுவலக முகாமையாளர்கள் தங்களின் ஊழியர்களின் அசல் ஆவணங்களை அல்லது சான்றிதழ்களைத் தடுத்து வைத்துக்கொண்டு மாற்று இடங்களுக்கு வேலைக்குச் செல்ல விடாது தடுத்தல், பயிற்சி ஒப்பந்தங்கள் முடிவடைந்த பின்னரும் குறைந்த ஊதியத்தில் வேலை செய்ய வற்புறுத்தல் மற்றும் பணி நேரம் முடிந்த பின்னரும் ஊழியர்களைக் கட்டாயப்படுத்தி வேலை வாங்கல் போன்ற பல்வேறு வடிவங்களில் நிறுவனங்களில் கட்டாய உழைப்புச் சுரண்டல்கள் அரங்கேறி வருவதாக அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான சட்டவிரோத செயல்களில் ஈடுபடும் நிறுவனங்கள் இனங்காணப்பட்டு, ஊழியர்களின் அசல் ஆவணங்களை உடனடியாகத் திருப்பி வழங்குமாறு அறிவுறுத்தப்படும் எனவும், அதனை மீறும் நிறுவனங்களுக்கு எதிராக நீதிமன்றங்கள் ஊடாகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

(அ)

# 42 பழங்கால ஓவியங்கள் மாயம்

கொழும்பு, மே. 22

நாட்டின் தேசிய கலைக்கூடத்திலிருந்து 42 பழங்கால ஓவியங்கள் காணாமல் போயுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறித்த தகவலை புத்தசாசன, மத மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவி நேற்றைய பாராளுமன்ற அமர்வில் தெரிவித்துள்ளார்.

இருப்புப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொத்த ஓவியங்களின் எண்ணிக்கை 281 ஆக இருந்தபோதிலும், தற்போது கலைக்கூடத்தில் 239 ஓவியங்கள் மாத்திரமே உள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu
22.05.2026 வெள்ளிக்கிழமை
பராபவ வருடம், வைகாசி 08

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## மீண்டும் பொருளாதார வீழ்ச்சி அபாயம்?

ராஜபக்ச ஆட்சியின் தவறான பொருளாதார முகாமைத்துவத்தின் விளைவான பொருளாதார நெருக்கடியே நான்கு வருடங்களுக்கு முன்னர் மக்கள் கிளர்ச்சிக்கு வழிவகுத்தது.

அந்த கிளர்ச்சியின் விளைவாகத் தோன்றிய புதிய அரசியல் சூழ்நிலையே தேசிய மக்கள் சக்தி அதிகாரத்துக்கு வருவதற்கு உதவியது.

முறைமை மாற்றத்தைச் செய்யப்போவதாகவும் புதிய அரசியல் கலாசாரத்தை அறிமுகப்படுத்தப் போவதாகவும் என்ன தான் புரட்சிகரமான வாக்குறுதிகளை தேசிய மக்கள் சக்தி ஜனாதிபதி தேர்தல் மற்றும் பாராளுமன்ற தேர்தல்களின்போது அள்ளிவீசியிருந்தாலும், மக்கள் புதிய அரசாங்கத்திடம் இருந்து பிரதானமாக எதிர்பார்த்தது பொருளாதார இடர்பாடுகளில் இருந்து உடனடி நிவாரணத்தையேயாகும்.

ஆனால், தேசிய மக்கள் சக்தி பதவிக்கு வந்து 19 மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் கூட மக்களின் வாழ்க்கைச் செலவு குறைந்தபாடாக இல்லை. பொருட்களின் விலைகள் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டேயிருக்கின்றன. இந்த 19. மாத கால இடைவெளிக்குள் டித்வா சூறாவளி ஏற்படுத்திய அழிவுகள் மற்றும் மத்திய கிழக்குப் போரின் விளைவான எரிபொருள் நெருக்கடி ஆகியவற்றை அரசாங்கம் தனக்கு வசதியாக பயன்படுத்தி மக்களின் பொருளாதார இடர்பாடுகளை தணிக்கும் பொறுப்பை தட்டிக்கழிக்கிறது.

அரச வருமானத்தை அதிகரிப்பதற்காக சர்வதேச நாணய நிதியம் விதந்துரைத்த சிக்கனத் திட்டங்களின் விளைவான சுமை சமூகத்தில் வறிய பிரிவு மக்களையே பெரிதும் பாதிக்கிறது. அவர்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்குடன் சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையை மீள் பேச்சுவார்த்தைக்கு உட்படுத்தப்போவதாக அளித்த வாக்குறுதியை அரசாங்கம் இன்று வரை நிறைவேற்றவில்லை.


சர்வதேச நாணய நிதியத்துடனான தற்போதைய உதவித் திட்ட உடன்படிக்கை அடுத்த வருடம் மார்ச் மாதமளவில் முடிவடையவிருக்கிறது. மீண்டும் ஒரு உடன்படிக்கையை அரசாங்கம் செய்து கொள்ள வேண்டியிருக்கும் என்று பொருளாதார நிபுணர்கள் கூறுகிறார்கள்.

மீண்டும் உடன்படிக்கை ஒன்று செய்து கொள்ளப்படும் பட்சத்தில் அதன் நிபந்தனைகளின் பிரகாரமே அரசாங்கம் தொடர்ந்து செயற்பட வேண்டியிருக்கும். அதனால், மக்கள் மீதான பொருளாதாரச்சுமை குறைவதற்கான வாய்ப்பு இல்லை என்றே தோன்றுகிறது.

பொருளாதார நெருக்கடியைக் கையாள முடியாத நிலையில் அரசாங்கம் இருக்கிறது. ஆனால், ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க மீண்டும் பொருளாதார வீழ்ச்சி ஏற்படுவதற்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என்று தொடர்ந்து கூறிவருகிறார். ஆனால், அத்தகையதொரு வீழ்ச்சியை அரசாங்கத்தினால் தடுக்கக்கூடியதாக இருக்கும் என்று நம்பிக்கை வைக்கக்கூடியதாக அதன் பொருளாதார அணுகுமுறைகள் அமையவில்லை.

மக்கள் இனிமேலும் தாங்கிக்கொள்ள முடியாதளவுக்கு வாழ்க்கைச் செலவு கூரையைப் பிரித்துக் கொண்டு வானளாவ உயர்ந்து கொண்டு போகிறது.

# மோதியை பாம்பாட்டியாகச் சித்தரித்து கார்ட்டூனுடன் நோர்வே நாளிதழில் கட்டுரை



பிரதமர் நரேந்திர மோடி யின் நோர்வே பயணம் தொடர்ந்து விவாதப் பொருளாக நீடித்து வருகிறது.

முன்னதாக, உள்ளூர் பத்திரி கையாளர் ஹெலா லாங் மோடி யிடம் கேள்வி எழுப்பியது (அதற்கு பிரதமர் நரேந்திர மோடி பதிலளிக்கவில்லை) குறித்து விவாதிக்கப்பட்டு வந்தது.

தற்போது நோர்வே செய்தித்தாள் ஒன்றில் பிரதமர் மோடி குறித்து வெளியிடப்பட்ட கார்ட்டூன் (கேலிச்சித்திரம்) பேசு பொருளாக மாறியுள்ளது.

இது விவாதிக்கப்பட்டு வருவதுடன், விமர்சிக்கப்பட்டும் வருகிறது.

அந்த நோர்வே செய்தித்தாள் "ஆஃப்டன்போஸ்டன்" ஆகும். இது நோர்வேயின் பிரபல நாளிதழ்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

பிரதமர் மோடியின் நார்வே பயணத்தின் போது, ஆஃப்டன் போஸ்டன் நாளிதழ் ஒரு கார்ட்டூனை வெளியிட்டிருந்தது, அதில் அவர் ஒரு "பாம்பாட்டியாகவும்" பெற்றோல் தாங்கி குழாய் ஒரு பாம்பாகவும் சித்தரிக்கப்பட்டிருந்தது.

இந்த கார்ட்டூன் ஒரு கட்டுரையுடன் சேர்ந்து வெளியிடப்பட்டது. அதன் தலைப்பு பிரதமர் மோடியை "ஒரு தந்திரமான மற்றும் சற்றே எரிச்சலூட்டும் மனிதர்" என்று விவரித்திருந்தது.

அந்த நோர்வே செய்தித்தாள் "ஆஃப்டன்போஸ்டன்" ஆகும், இது நோர்வேயின் மிகப்பெரிய மற்றும் மிகவும் செல்வாக்கு மிக்க நாளிதழ்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இந்த படம் இணையத்தில், குறிப்பாக இந்தியாவில் கடுமையான எதிர்வினைகளைத் தூண்டியது.

பல பயனர்களும் விமர்சகர்களும் இதனை "இனவெறி" என்று அழைத்ததுடன், இந்தியாவை பின்தங்கிய நாடாக சித்தரிக்க மேற்கத்திய ஊடகங்கள் நீண்ட காலமாக முயன்று வந்த காலனித்துவ காலத்தை இது நினைவூட்டுவதாகவும் தெரிவித்தனர்.

மூத்த பத்திரிகையாளர் ஆதித்யா ராஜ் கவுல் எக்ஸ் தளத்தில் இதுகுறித்துப் பதிவிடுகையில், "அதிர்ச்சியளிக்கிறது. இனவெறி. அவதூறு. நோர்வேயின் மிகப்பெரிய செய்தித்தாளான "ஆஃப்டன்போஸ்டன்", இந்தியப் பிரதமரைப் பாம்பாட்டியாகச் சித்தரிக்கும் அதிர்ச்சிகரமான கார்ட்டூனை வெளியிடுகிறது. ஒரு தந்திரமான மற்றும் சற்றே எரிச்சலூட்டும் மனிதர் என்று அதற்கு தலைப்பு வைத்துள்ளது. அவர்களால் இந்தியாவின் வளர்ச்சியையும் வெற்றியையும் ஜீரணிக்க முடியவில்லை. பரிதாபம்" என்று குறிப்பிட்டுள்ளார்.

சம்ஜாவெட்65 என்ற எக்ஸ் பக்கத்தில், "முற்றிலும் இனவெறித்தனமானது. உலகம் இதற்கு முன்பு இந்தியாவைப் பாம்பாட்டிகளின் தேசமாகப் பார்த்தது என்று பிரதமர் மோடி பலமுறை கூறியுள்ளார். இப்போது, அவர் ஒஸ்லோவிற்குப் பயணம் மேற்கொண்டுள்ள வேளையில், ஒரு முன்னணி ஐரோப்பிய நாளிதழ் அவரை அதே கோணத்தில் சித்தரிக்கிறது" என்று பதிவிடப்பட்டுள்ளது.

தி இந்து பத்திரிகையாளரும், சீன விவகார நிபுணருமான ஆனந்த் கிருஷ்ணன், "ஒரு மலிவான செய்தித்தாளில் இருந்து வந்தது என்று நான் தவறாக நினைத்த இந்த கார்ட்டூன், உண்மையில் நோர்வேயின் மிகப் பெரிய நாளிதழும், "பேப்பர் ஒவ் ரெக்கார்ட்" என்று அழைக்கப்படும் ஆஃப்டன்போஸ்டன் இதழில் வெளியிடப்பட்டுள்ளது. உயர்ந்த பத்திரிகை தரநிலைகள் என்று கூறப்படும் நற்பெயருக்கு இது ஒரு நல்ல உதாரணம் அல்ல" என்று குறிப்பிட்டுள்ளார்.

பத்திரிகையாளர் சஷாங்க் மேட்டோ இது குறித்து பதிவிட்டுள்ளார்.

"நோர்வேயின் மிகப்பெரிய நாளிதழ் பிரதமர் மோடியின் கார்ட்டூன் ஒன்றை வெளியிட்டுள்ளது, அவர் ஆஸ்லோவிற்குப் பயணம் மேற்கொண்டிருந்த போது அவரைப் பாம்பாட்டியாக அது சித்தரித்துள்ளது." என அப்பதிவில் கூறப்பட்டுள்ளது.

கார்ல்வீலஸ் என்ற எக்ஸ் பக்கத்திலிருந்து இடப்பட்ட பதிவில், "நோர்வேயின் மிகப் பெரிய நாளிதழ் பிரதமர் மோடியின் கார்ட்டூன் ஒன்றை வெளியிட்டு, அவரைப் பாம்பாட்டியாகச் சித்தரித்துள்ளது. இது இதழியல் அல்ல. இது, காலனித்துவ கால இனவெறியை கருத்துரையாக முன்வைப்பது போன்றதாகும். அவர்களால் இந்தியாவின் எழுச்சியைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. எனவே அவர்களின் தாத்தாக்கள் பயன்படுத்திய அதே பழைய, ஒரே மாதிரியான சித்திரங்களை மீண்டும் மீண்டும் செய்கிறார்கள். உண்மை எப்போதும் வெளிப்படும்" என்று கூறப்பட்டுள்ளது.

பிராங்க் ரோஸ்விக் என்பவர் இந்த கட்டுரையை எழுதியுள்ளார்.

ஆஃப்டன்போஸ்டன் நாளிதழில் வெளியிடப்பட்ட இந்தக் கட்டுரை, பிரதமர் நரேந்திர மோடியின் நோர்வே பயணம் மற்றும் அவரது வெளியுறவுக் கொள்கை குறித்து விவாதிக்கிறது. அதில், மோடியின் வெளியுறவுக் கொள்கை மிகவும் நடைமுறை சார்ந்தது என்றும், அதாவது அவர் சித்தாந்தத்தை விட தேசிய நலன்களுக்கு முன்னுரிமை அளிக்கிறார் என்றும் கட்டுரை ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

நாடுகள் ஒன்றுக்கொன்று உடன்படுகின்றனவா இல்லையா என்பதைப் பொருட்படுத்தாமல், பல்வேறு நாடுகளுடன் நல்லுறவைப் பேண முற்படும் ஒரு தலைவராக மோடி சித்தரிக்கப்படுகிறார்.

அந்தக் கட்டுரையில், மோடியின் இந்தக் கொள்கை "ரியல்பாலிடிக்" - அதாவது, அரசியலில் நடைமுறை நலன்களின் அடிப்படையில் முடிவுகளை எடுப்பது என்று அழைக்கப்பட்டுள்ளது.

வர்த்தகம், தொழில்நுட்பம், எரிசக்தி மற்றும் வியூகம் என பல நாடுகளுடன் கூட்டாண்மைகளை அதிகரித்து வரும், வளர்ந்து வரும் உலக வல்லரசாக இந்தியாவை அவர் அந்த கட்டுரையில் விவரித்திருந்தார்.

இதில், நோர்டிக் நாடுகள் (நோர்வே, ஸ்வீடன், டென்மார்க், பின்லாந்து மற்றும் ஐஸ்லாந்து போன்ற வட ஐரோப்பாவின் குளிர்ந்த வெப்பநிலை கொண்ட நாடுகள்) இந்தியாவுக்கு முக்கியமானவை என்று விவரிக்கப்பட்டுள்ளது. ஏனெனில் அங்கு பசுமைத் தொழில்நுட்பம், டிஜிற்றல்மயமாக்கல் தொடர்பான வாய்ப்புகள் உள்ளன.

மேற்கத்திய நாடுகள் சில சமயங்களில் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையை, குறிப்பாக ரஷ்யாவுடனான அதன் உறவுகளில், முரணானதாகக் கருதலாம் என்றும் இந்தக் கட்டுரை சுட்டிக்காட்டுகிறது. மேலும், இந்தியாவின் ஜனநாயகம் மற்றும் பத்திரிகை சுதந்திரம் குறித்த சில விமர்சனங்களும் இதில் உள்ளன.

ஒட்டுமொத்தமாக, இந்தக் கட்டுரையின் தொனி முற்றிலும் ஆதரிப்பதாகவோ அல்லது எதிர்ப்பதாகவோ இல்லை. இது மோடியின் வெளியுறவுக் கொள்கையை ஒரு உத்திசார்ந்த மற்றும் நலன் சார்ந்த உலகளாவிய கொள்கையாக சித்தரிக்க முயல்கிறது.

பிரதமர் நரேந்திர மோடியின் நோர்வே பயணம் குறித்து பெரிதும் பேசப்படுகிறது. நோர்வே பிரதமர் ஜோனாஸ் கர் ஸ்டோரைச் சந்தித்த பிறகு மோடி கிளம்பும்போது, உள்ளூர் பத்திரிகையாளர் ஹெலா லாங் அவரிடம் ஒரு கேள்வி கேட்டார், ஆனால் பிரதமர் பதிலளிக்காமல் முன்னோக்கிச் சென்றுவிட்டார்.

சமூக ஊடகங்களில் பகிரப்பட்ட ஒரு காணொளியில், பத்திரிகையாளர் ஹெலா லாங், "பிரதமர் மோடி, உலகின் மிகவும் சுதந்திரமான பத்திரிகையாளர்களிடமிருந்து நீங்கள் ஏன் கேள்விகளை எதிர்கொள்வதில்லை?" என்று கூறுவதைக் கேட்க முடிகிறது.

பின்னர், இந்தக் காணொளியைப் பகிர்ந்த ஹெலா லாங், "இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி எனது கேள்விக்குப் பதிலளிக்கவில்லை. நான் இதை எதிர்பார்க்கவில்லை. உலகப் பத்திரிகை சுதந்திரக் குறியீட்டில் நோர்வே முதலாவது இடத்திலும், இந்தியா 157ஆவது இடத்திலும் உள்ளது" என்று பதிவிட்டார்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, ராகுல் காந்தி உள்ளிட்ட இந்தியாவில் உள்ள பல எதிர்க்கட்சித் தலைவர்கள் பிரதமரை விமர்சித்ததுடன், அவர் கேள்விகளுக்குப் பயப்படுவதாகக் குற்றம் சாட்டின.

அதே நேரத்தில் பாரதிய ஜனதா கட்சியின் தகவல் தொழில்நுட்பப் பிரிவு தலைவர் அமித் மாளவியா, ஹெலா லாங்கின் கேள்விகள் மற்றும் கூற்றுகள் "அடிப்படையற்றவை" என்று கூறினார்.

(நன்றி-பிபிசி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மே - 22 வெள்ளிக்கிழமை
பராபவ வருடம் - வைகாசி 08
நல்ல நேரம் : 09.00 - 13.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : சப்தமி




**மேடம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர் பாராத ஒரு வேலை முடியும். சகோதரி உதவுவார். புது வேலை அமையும். வியாபாரம் தழைக்கும். சலுகைகள் கிடைக்கும். நன்மை கிட்டும் நாள்.

**இடபம்**
துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக் கும். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்றுத் தீரும். உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும்.

**மிதுனம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங் கும். தோற்றப் பொலிவுக் கூடும். புது நட்பு மலரும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். அலு வலகத்தில் மரியாதை கூடும். மகிழ்ச்சியான நாள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் அனாவசிய பேச்சை தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் வாடிக்கையா ளர்கள் கவரும்படி சலுகைகளை அறிவிப்பீர்கள். அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம்.

**சிம்மம்**
விடாப்பிடியாக செயல்பட்டு வேலைகளை முடிப்பீர் கள். பிள்ளைகளால் டென்ஷன் அதிகரிக் கும். உத்தியோகத்தில் மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**கன்னி**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். பெற் றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வியாபாரத்தை பெருக்கு வீர்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர் வாகத் திறமை வெளிப்படும். லாபம் பெறும் நாள்.

**துலாம்**
உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். பிள்ளைகள் நம்பிக்கை தருவார்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உயரதி காரி உங்களை முழுமையாக நம்புவார்.

**விருட்சிகம்**
குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். வியாபாரத்தில் தள்ளிப்போன வாய்ப்புகள் தேடி வரும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எந்த காரியத்தை தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். உத்தியோகத் தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

**மகரம்**
கடினமான காரியங்களை யும் எளிதாக முடிப்பீர் கள். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். பய ணங்களால் மகிழ்ச்சி தங்கும். சக ஊழியர்களால் ஆதாயம் உண்டு. திறமைகள் வெளிப்படும் நாள்.

**கும்பம்**
கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். உறவினர் நண்பர்கள்மத்தியில் அந்தஸ்து உயரும். அரசால் அனுகூலம் உண்டு. உத்தியோகத்தில் அதிகாரி கள் முன்வைத்த கோரிக்கைகள் நிறை வேறும்.

**மீனம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். அக்கம்- பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை குறை யும். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். புதுமை படைக்கும் நாள்.

# பல்கலைக்கு தெரிவாகிய மாணவர்களுக்கு நிதியுதவி



யாழ்ப்பாணம், மே. 22

பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான மாணவர்களுக்கான நிதியுதவி வழங்கும் நிகழ்வு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி அதிபர் அருட்தந்தை அன்ரன் அமலதாஸ் அடிகளார் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கலந்துகொண்டு, யாழ். ஊர்காவற்றுறை புனித அந்தோணியார் கல்லூரியிலிருந்து 2025 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சை மூலம் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவான 13 மாணவர்களுக்கான நிதி அன்பளிப்பை வழங்கினார்.

இதன்போது உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர், "யுத்தத்தினால் நலிவடைந்துள்ள நாம், உலக அரங்கில் சாதனையாளர்களாக உருவெடுப்பதற்கு கல்வியே முதன்மையான வழியாகும்" என வலியுறுத்தினார்.

கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், ஊர்காவற்றுறை பிரதேச சபையின் உப தவிசாளர் செபஸ்தியான் பிள்ளை லெனின் ரஞ்சித், ஊர்காவற்றுறை சென் மேரிஸ் பெண்கள் கல்லூரியின் அதிபர் அருட்சகோதரி ரஞ்சினி, பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவர்களின் ஊர்காவற்றுறைத் தொகுதிக்கான இணைப்பாளர் திரு. கனகையா, கட்சியின் செயற்பாட்டாளர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ)

# வீதியோர மரங்களின் கிளைகளை வெட்டும்போது உள்ளூராட்சிச் சபைகளுக்கு அறிவிக்க அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மே. 22

யாழ்ப்பாணத்தில் மின் கம்பிகளுக்கு இடையூறாக காணப்படும் மரங்களின் கிளைகளை மின்சார சபையினர் வெட்டும்போது, உள்ளூராட்சி மன்றங்களுக்கு அறிவிக்குமாறு மின்சார சபையினருக்கு யாழ்.மாவட்ட செயலர் அறிவுறுத்தியுள்ளார்.

யாழ். மாவட்ட சுற்றாடல் குழுக் கூட்டத்தில், மின் கம்பிகளுக்கு இடையூறாக காணப்படுவதாக மரக்கிளைகளை மின்சார சபையினர் கண்மூடித்தனமாக வெட்டி வீதிகளில் விட்டுச் செல்வதாக குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டன.

அதனை அடுத்து, இனிவரும் காலங்களில் இலங்கை மின்சார சபையினர் மரக்கிளைகளை வெட்டும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது குறித்த பிரதேச உள்ளூராட்சி மன்றங்களுடன் ஒன்றிணைந்து வெட்டுவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும் என மாவட்ட செயலர் அறிவுறுத்தினார்.

இக் கூட்டத்தில் மாநகர பிரதி முதல்வர், உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர், பிரதேச செயலாளர்கள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வழிபாட்டுத்தலங்களில் ஒலிபெருக்கி பாவனை வாண வேடிக்கை என்பவற்றுக்குக் கட்டுப்பாடு

யாழ்ப்பாணம், மே. 22

யாழ்ப்பாணத்தில் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் ஒலிபெருக்கிகள் மூலம் அதிக ஒலி எழுப்பப்பட்டால் அதனை கட்டுப்படுத்த பிரதேச செயலாளர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாவட்ட செயலர் ம.பிரதீபன் அறிவுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட சுற்றாடல் குழுக் கூட்டம் யாழ். மாவட்ட செயலர் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் தலைமையுரையாற்றிய மாவட்ட செயலர், மாவட்ட மட்டத்தில் இருக்கும் உள்ளூர் அதிகார சபைகள் கழிவு முகாமைத்துவம் மட்டுமின்றி சுற்றாடல் சார்ந்த, சூழல் சார்ந்த பாதுகாப்பு நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டும்.

வழிபாட்டுத்தலங்கள் மற்றும் பொது நிகழ்வுகளில் பாவிக்கப்படும் ஒலிபெருக்கிகள் அனுமதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளையும் மீறி பொதுமக்களுக்கு குறிப்பாக மாணவர்கள், நோயாளிகளுக்கு இடையூறு ஏற்படும் வகையில் பெரும் ஒலி எழுப்பப்படுவதாக பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்று வருகின்றன.

அதிக ஒலி எழுப்பப்பட்டால் கிராம அலுவலர் ஊடாக அதனை கட்டுப்படுத்தும் பொறுப்பை பிரதேச செயலாளர்கள் ஏற்க வேண்டும்.

மீறுவோர்கள் மீது கிராம அலுவலர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மேலும், பொலித்தீன், பிளாஸ்ரிக் பாவனைகளை கட்டுப்படுத்தல், குப்பைகளை எரிவூட்டுவதனால் வளி மாசடைதல் மற்றும் வாண வேடிக்கைகளால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாகவும் பொது மக்களுக்கு உரிய விழிப்புணர்வுகளை வழங்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என தெரிவித்தார். (அ)

# ஹெரோயினுடன் கைது செய்யப்பட்ட பெண்ணுக்கு 7 வருட கடூழியச் சிறை!

யாழ்ப்பாணம், மே. 22

யாழ்ப்பாணம், பொம்மை வெளிப் பகுதியில் கடந்த 2020 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 1.475 கிராம் கெரோயின் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த நிலையில் கைது செய்யப்பட்ட பெண்ணுக்கு 7 வருட கடூழிய சிறைத் தண்டனை மற்றும் 1 இலட்சம் ரூபா தண்டப் [illegible] மேல் நீதிமன்ற நீதிபதி அலெக்ஸ் ராஜா தீர்ப்பளித்தார்.

வழக்கு தொடுநர் தரப்பில் சட்டமா அதிபர் சார்பில் ஆஜராகி இருந்த அரச சட்டவாதி ஆறுமுகம் தனுஷன், அதிகரித்து வரும் போதைப்பொருள் தொடர்பான குற்றங்கள் மற்றும் உயர் நீதிமன்ற வழக்குகளை மேற்கோள்காட்டி போதைப்பொருள் குற்றவாளிகளுக்கு அதியுச்ச தண்டனை வழங்கவேண்டும் என சமர்ப்பனங்களை மேற்கொண்டு இருந்த நிலையில் இந்த தண்டனை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் தண்டப்பணம் செலுத்த தவறும் பட்சத்தில் மேலும் 12 மாத கால சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் உத்தரவிடப் பட்டது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு



# ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களின் பின் பிள்ளையானை சந்தித்தது உண்மை!

## கூறுகின்றார் நாமல் ராஜபக்ஷ

கொழும்பு, மே. 22

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்களின் பின்னர், மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த சிவநேசதுரை சந்திரகாந்தன் எனப்படும் பிள்ளையானை தாம் நேரில் சென்று சந்தித்தமை எந்தவொரு இரகசியமும் இல்லாத ஒரு விடயமாகும் என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



இச்சந்திப்பு குறித்து பரப்பப்படும் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் இதனைத் குறிப்பிட்டுள்ளார்.

அந்த காலகட்டத்தில், தாங்கள் ஒரே அரசியல் கூட்டணியில் அங்கம் வகித்ததாக தெரிவித்துள்ள அவர், 2015ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும், 2018ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலும் ஒன்றிணைந்தே போட்டியிட்டதாகவும் தனது எக்ஸ் சமூக வலைத்தளப் பதிவில் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# பதப்படுத்திய உணவுப் பொருள்களின் விலைகள் விரைவில் உச்சம் தொடும்!

கொழும்பு, மே. 22

அரசாங்கத்திடம் கோரப்பட்டுள்ள சலுகைகள் வழங்கப்படாவிட்டால், பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்களின் சில்லறை விலைகள் நுகர்வோரால் தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு மிக விரைவில் உயரும் என உணவு பதப்படுத்தும் சங்கம் எச்சரித்துள்ளது.

மின்சாரக் கட்டண உயர்வு மற்றும் எரிபொருள் விலை அதிகரிப்புக்கு மத்தியில், மூலப்பொருள்களுக்கான தட்டுப்பாடு நிலவுவதுடன், விநியோகச் சங்கிலி கட்டமைப்பிலும் பாரிய தடங்கல்கள் ஏற்பட்டுள்ளதாக அந்தச் சங்கத்தின் தலைவர் அருணா சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமைகளுக்குத் தீர்வு காண்பதற்காக, தொழில் அமைச்சுக்கு விசேட முன்மொழிவுகள் அடங்கிய அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதற்கமைய, இந்தத் தொழில் துறைக்கான எரிபொருள் சலுகை, தொழிற்சாலைகளின் உற்பத்தித் திறனைக் கருத்திற்கொண்டு மின்சாரக் கட்டணத்தில் சலுகை மற்றும் மூலப்பொருட்களுக்கான சலுகை ஆகியவற்றை வழங்குமாறு அமைச்சுகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# அதிவேக நெடுஞ்சாலைகள் பராமரிப்புக்கு வருடாந்தம் 5,180 மில்லியன் ரூபாய் செலவு

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க தகவல்

கொழும்பு, மே. 22

இலங்கையிலுள்ள 312.57 கிலோமீற்றர் நீளமுடைய ஒட்டுமொத்த அதிவேக நெடுஞ்சாலைக் கட்டமைப்பின் வருடாந்த பராமரிப்புக்காக, 5180 மில்லியன் ரூபாய் செலவிடப்படுவதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர்ப்புற அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க எழுப்பிய கேள்விக்கு நேற்று முன் தினம் பதிலளிக்கும் போதே அவர் இந்த விவரங்களை வெளியிட்டுள்ளார்.

இதற்கமைய, 200.45 கிலோமீற்றர் நீளமுடைய கொட்டாவையிலிருந்து மத்தள வரையிலான தெற்கு அதிவேக நெடுஞ்சாலைக்கு 2024.5 மில்லியன் ரூபாயும், 28.86 கிலோமீற்றர் நீளமுடைய வெளிவட்ட அதிவேக நெடுஞ்சாலைக்கு 767.6 மில்லியன் ரூபாயும் செலவிடப்படுகிறது.

மேலும், 25.8 கிலோமீற்றர் நீளமுடைய கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலைக்கு 834.1 மில்லியன் ரூபாயும், 40.91 கிலோமீற்றர் நீளமுடைய மத்திய அதிவேக நெடுஞ்சாலைக்கு 531 மில்லியன் ரூபாயும், 16.55 கிலோமீற்றர் நீளமுடைய தெற்கு அதிவேக நெடுஞ்சாலை நீடிப்பு பகுதிக்கு 1022.7 மில்லியன் ரூபாயும் வருடாந்த பராமரிப்புக்காக செலவிடப்படுவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

# நீதியரசர் வெற்றிடங்கள் நிரப்புவதில் தாமதம் கேள்விக்கு பதிலளிக்க நீதி அமைச்சர் மறுப்பு!

கொழும்பு, மே. 22

உயர்நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் நிலவும் நீதியரசர் வெற்றிடங்களை நிரப்புவதில் ஏற்பட்டுள்ள தாமதங்கள் குறித்து பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்கு, பாராளுமன்ற நிலையியற் கட்டளையை மேற்கோள் காட்டி பதிலளிக்க நீதி அமைச்சர் ஹர்ஷன நாணாயக்கார மறுத்துள்ளார்.

பாராளுமன்றத்தின் வாய்மூல வினாக்கள் வேளையில் கலந்துகொண்டு உரையாற்றிய எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா, சிவில் மற்றும் குற்றவியல் நீதி நிர்வாகக் கட்டமைப்பின் செயல்திறனை மேம்படுத்துவதற்கு உயர் நீதிமன்றங்களுக்கு நீதியரசர்களை நியமிப்பது இன்றியமையாதது என வலியுறுத்தினார்.

தற்போதைய நிலவரப்படி உயர்நீதிமன்றத்தில் ஐந்து வெற்றிடங்களும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மூன்று வெற்றிடங்களும் நிலவுவதாக சுட்டிக்காட்டிய அவர், இந்த எட்டு வெற்றிடங்களில் சில கடந்த ஆறு மாதங்களுக்கும் மேலாக நிரப்பப்படாமல் உள்ளதாகக் குறிப்பிட்டார்.

இந்த நியமனங்களை மேற்கொள்ளும் பொறுப்பு ஜனாதிபதிக்கே உரியது எனவும், ஜனாதிபதி பரிந்துரைகளை வழங்கும் வரை அரசியலமைப்பு பேரவையினால் அவற்றை பரிசீலிக்க முடியாது எனவும் தெரிவித்த அஜித் பி. பெரேரா, இந்நியமனங்களை விரைவுபடுத்துவதற்காக நீதி அமைச்சர் ஜனாதிபதியுடன் பேசி தலையீடு செய்வாரா என கேள்வி எழுப்பினார்.

இக்கேள்விக்கு சுருக்கமாக பதிலளித்த நீதி அமைச்சர் ஹர்ஷன நாணாயக்கார, பாராளுமன்ற நிலையியற் கட்டளை 33 இற்கு அமைவாக இக்கேள்விக்கு பதிலளிக்கவேண்டிய கட்டாயம் தனக்கு இல்லை எனத் தெரிவித்தார். (அ)

# வீதி அபிவிருத்தி பொறியியலாளர் சங்கம் காலவரையறையற்ற பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, மே. 22

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர்கள் சங்கம், சம்பள முரண்பாடு உள்ளிட்ட இரண்டு முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து நேற்று முதல் காலவரையறையற்ற தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாக அறிவித்துள்ளது.

தங்களது கோரிக்கைகள் தொடர்பாக இதற்கு முன்னர் அதிகாரிகளுடன் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டபோதிலும், அந்தப் பேச்சுவார்த்தைகளின்போது அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை எனவும், இதன் காரணமாகவே இந்த தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அச்சங்கம் தெரிவித்துள்ளது.

இது குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர்கள் சங்கத்தின் தலைவர் உமேஷ் அளுத்பல,

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கள் மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கள் போன்ற வெளிவாரியான குழுக்களில் பங்கேற்பதில் இருந்து பொறியியலாளர்கள் விலகியிருப்பார்கள் எனத் தெரிவித்தார். (அ)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு



# வடகடல் பிராந்திய கடல்சார் சுற்றுச்சூழல் அமைப்பைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை

கொழும்பு, மே. 22

இலங்கையின் பலவீனமான வடகடல் பிராந்திய கடல்சார் சுற்றுச்சூழல் அமைப்பைப் பாதுகாப்பதற்கான பாரிய பாதுகாப்பு வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

சுற்றுச்சூழல் சீரழிவு, அழிவுகரமான மீன்பிடி முறைகள் மற்றும் வடகடல் மற்றும் அதனை அண்டிய தீவுகளில் இடம்பெறும் சட்டவிரோத, கட்டுப்பாடற்ற மீன்பிடி நடவடிக்கைகளுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என உயர்மட்ட அரச அதிகாரிகள் உறுதியளித்துள்ளனர்.

இலங்கையின் கடல்சார் பாரம்பரியத்தைப் பாதுகாத்தல் மற்றும் கடல் பாதுகாப்பு முயற்சிகளை முடுக்கிவிடுதல் ஆகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்ட ஒருங்கிணைந்த உத்தி ஒன்றை உருவாக்குவதற்காக, சுற்றுச்சூழல் அமைச்சில் கடந்த செவ்வாய்க்கிழமை உயர்மட்டக் கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

சுற்றுச்சூழல் பிரதி அமைச்சர் அன்ரன் ஜெயக்கொடி மற்றும் பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர ஆகியோரின் கூட்டுத் தலைமையில் இந்த மாநாடு நடத்தப்பட்டதுடன், இதில் கடற்படை உயர் அதிகாரிகள், சுற்றுச்சூழல் வல்லுநர்கள் மற்றும் அரச நிறுவனங்களின் பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டனர்.

வட மாகாணத்தில் புதிய கடல்சார் பாதுகாக்கப்பட்ட பகுதிகளைப் பிரகடனப்படுத்துவது குறித்து இதன்போது விரிவாக ஆராயப்பட்டதுடன், டைனமற் வெடிபொருள்களைப் பயன்படுத்துதல் மற்றும் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி முன்னெடுக்கப்படும் சட்டவிரோத மீன்பிடி முறைகளால் பவளப்பாறைகள் மற்றும் அரிய கடல்வாழ் உயிரினங்கள் பெரும் அழிவை எதிர்நோக்கியுள்ளதாக இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த புதிய பாதுகாப்பு வலயங்களின் ஸ்தாபிப்பு மூலம் உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படாது எனவும், மாறாக நிலையான மீன்பிடி முறைகள் மற்றும் சூழல் சுற்றுலாத்துறையை சர்வதேச அளவில் மேம்படுத்த இது வழிவகுக்கும் எனவும் அதிகாரிகள் தெளிவுபடுத்தியுள்ளனர். (அ)

# ஐஸ் போதைப்பொருளுடன் கைதான முன்னாள் அலுவலரிடம் விசாரணை

அம்பாறை, மே. 22

ஐஸ் போதைப்பொருளுடன் கைதான முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தரிடம் கல்முனை தலைமையக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரெலிகொம் அருகில் நேற்று முன் தினம் புதன்கிழமை மாலை மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போது குறித்த முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் சந்தேகத்தின் அடிப்படையில் கைதானார்.

50 வயது மதிக்கத்தக்க சந்தேக நபரான முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தரிடம் இருந்து 10 கிராம் 130 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது. அத்துடன் பணப்பை, ஒரு தொகை பணம், கைத்தொலைபேசி என்பனவற்றையும் சந்தேக நபர் வசம் இருந்து பொலிஸார் மீட்டுள்ளனர்.

குறித்த சந்தேக நபர் பொலிஸ் உத்தியோகத்தராக கடமையாற்றியபோது போதைப்பொருள் தொடர்பிலான குற்றச்சாட்டில் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டவர் என்பதுடன் இலங்கை பொலிஸில் இருந்து விலகும்போது பொலிஸ் சார்ஜன்ட்டாக செயற்பட்டிருப்பதாக ஆரம்ப கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

மேலும் குறித்த சந்தேக நபர் அண்மைக்காலமாக அப்பகுதி இளைஞர்களுக்கு போதைப் பொருட்களை இரகசியமாக விநியோகித்து வருபவர் என பொலிஸார் குறிப்பிட்டனர். (அ)

# கஞ்சிகுடிச்சாறுப் பகுதியில் 5 மோட்டார் குண்டுகள் மீட்பு



அம்பாறை, மே. 22

அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கஞ்சிகுடிச்சாறு குளத்துக்கு அருகில் குறித்த ஐந்து மோட்டார் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக மீட்கப்பட்டுள்ள இக்குண்டுகள் கடந்த யுத்த காலத்தில் பாவிப்பதற்காக மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குண்டுகள் மீட்கப்பட்ட பகுதி கடந்த காலத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியாக காணப்பட்டது.

மீட்கப்பட்டுள்ள குண்டுகள் தொடர்பில் திருக்கோவில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

மீட்கப்பட்ட குண்டுகளை செயலிழக்கச் செய்வதற்காக விசேட அதிரடிப்படை பிரிவினருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# வாகன விபத்தில் ஒருவர் பலி!

திருமலை, மே. 22

திருகோணமலை தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திருகோணமலை கண்டி பிரதான வீதியின் ஜெயபுர பகுதியில் நேற்று முன் தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு விபத்தில் உயிரிழந்தவர் ஹிங்குராகொட பகுதியை சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சிறிய ரக பட்டா வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் மோதுண்டதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவரே உயிரிழந்துள்ளார்.

திருகோணமலையில் இருந்து வந்த பட்டா ரக வாகனமும் திருகோணமலை நோக்கி சென்ற மோட்டார் சைக்கிளுமே இவ்வாறு மோதி விபத்து சம்பவித்துள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் தம்பலகாமம் பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து சம்பவத்தில் தொடர்புடைய வாகனச் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# 17 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட ஆயுர்வேத மத்திய மருந்தகம் திறந்து வைப்பு



திருமலை, மே. 22

கிழக்கு மாகாண சபையின் 2025 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டின் கீழ், திருகோணமலை-பதவி சிறீபுர பிரதேசத்தில் ரூபா 17 மில்லியன் செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஆயுர்வேத மத்திய மருந்தகம் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்தியர் எம்.ஏ.நபீல் தலைமையில் இடம்பெற்ற இந்த திறப்பு விழாவுக்கு, கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர பிரதம அதிதியாக கலந்துகொண்டு குறித்த மருந்தகத்தை திறந்து வைத்து மக்கள் பாவனைக்கும் கையளித்தார்.

அப்பிரதேச மக்களின் நீண்டகால சுகாதாரத் தேவையை நிவர்த்தி செய்யும் நோக்கில் நவீன வசதிகளுடன் இந்த புதிய மருந்தகத்தின் கட்டடத் தொகுதி அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அப்பகுதி மக்கள் தரமான ஆயுர்வேத வைத்திய சேவைகளை இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியும். (அ)

# ஓய்வூதிய கொடுப்பனவு மறுசீரமைப்பு; 2 ஆம் கட்ட நடவடிக்கை ஜூலை முதல்!

கொழும்பு, மே. 22

ஓய்வூதியக் கொடுப்பனவு மறுசீரமைப்புத் திட்டத்தின் இரண்டாம் கட்ட நடவடிக்கைகள் எதிர்வரும் ஜூலை மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

இத்திட்டத்தின் முதற் கட்டத்தின் கீழ் 98 சதவீதமான கொடுப்பனவுகள் ஏற்கனவே நிறைவு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன குறிப்பிட்டுள்ளார்.

ஓய்வூதியத் திணைக்களத்தின் கட்டமைப்பில் ஒட்டுமொத்தமாக நான்கு இலட்சத்து 63 ஆயிரம் பேர் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களில் நான்கு இலட்சத்து 29 ஆயிரம் ஓய்வூதியதாரர்களுக்குக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன், ஒவ்வொரு மாதமும் சுமார் இரண்டாயிரத்து 500 புதிய ஓய்வூதியதாரர்கள் இக்கட்டமைப்பில் இணைத்துக் கொள்ளப்படுவதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, ஓய்வூதியக் கொடுப்பனவு செயல்முறைகளை விரைவுபடுத்துவதற்காக பிரதேச செயலகங்கள் ஊடாக இணையவழி முறையொன்று தற்போது செயல்பாட்டிலுள்ளதாகத் தெரிவித்துள்ள அவர், இந்த அமைப்பின் மூலம் சுமார் மூன்று இலட்சத்து 97 ஆயிரத்து 154 ஓய்வூதியதாரர்களின் தரவுகள் ஏற்கனவே கணினிமயப்படுத்தப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்துள்ளார்.

# உகந்தமலை முருகன் ஆலயத்துக்கு 3 வருடங்கள் பரிபாலன சபை இல்லை!

## இந்து அமைப்புகள் கவலை

அம்பாறை, மே. 22

வரலாற்று பிரசித்தி பெற்ற உகந்தமலை முருகன் ஆலயத்திற்கு மூன்று வருடங்களாகியும் பரிபாலன சபை நியமிக்கப்படவில்லை. அதனால் அங்கு பல்வேறு பட்ட நிர்வாக நடைமுறைப் பிரச்னைகள் நிலவி வருகின்றன என்று அம்பாறை மாவட்ட இந்து அமைப்புகள் மற்றும் ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இனி மகா கும்பாபிஷேகத்தை எதிர்கொள்கின்ற காலம். இந்த வேளையில் முறையான ஒரு பரிபாலன சபை இல்லாதது மேலும் பல பிரச்சினைகளுக்கு வழி வகுக்கும் என நம்பப்படுகிறது.

கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு உகந்தை முருகன் ஆலயத்துக்கான புதிய நிர்வாகிகள் தெரிவு செய்வதற்கான பொதுக் கூட்டமானது லகுகல பிரதேச செயலாளர் என் .நவநீதராசா தலைமையில் லகுகல பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் காலை முதல் மாலை வரை சுமார் 06 மணிநேரமாக இடம்பெற்றது.

பாணமை தொடக்கம் கழுவாஞ்சிக்குடி வரையிலானவர்கள் வருகை தந்திருந்தும் இந்த ஆலயத்திற்கென சிறப்பான முறையில் நிர்வாகத் தெரிவை மேற்கொள்ள முடியாமல் அனைவரும் ஏமாற்றத்துடன் திரும்ப நேர்ந்தது.

அன்று இவ் ஆலய பரிபாலனம் லாகுகல பிரதேச செயலரிடம் தற்காலிகமாக கையளிக்கப்பட்டது.

எனவே மிக விரைவில் ஆடிவேல் விழா உற்சவம் மற்றும் கதிர்காம பாதயாத்திரை நடைபெறவிருப்பதால் அந்த ஆலயத்திற்கு முறையானதொரு பரிபாலன சபையை அமைத்து ஆலயம் சிறக்க வழி செய்யுமாறு இந்து அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## சகல அரசியல்வாதிகள்...

அதேவேளை, முன்னாள் அமைச்சர் ஒருவர் நீதித்துறையில் தலையீடு இடம்பெறுகின்றது என தற்போது குற்றஞ்சாட்டுவதாகக் கூறிய அவர், "அவரது ஆட்சிக் காலத்தில் பிரதம நீதியரசர் எவ்வாறு பதவி நீக்கம் செய்யப்பட்டார் என்பதை அவர் மறந்துவிட்டார்" என விமர்சித்தார்.

நீதித்துறை சுயாதீனமாக இருக்க வேண்டியது அவசியம் என வலியுறுத்திய அவர், அரசியல்வாதிகள் பொய்யான வாக்குறுதிகளை வழங்குவதை நிறுத்தவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

மேலும், குருமார்கள் மற்றும் மதத் தலைவர்களுக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படும் என பல அரசாங்கங்கள் உறுதியளித்தும் அவை நிறைவேற்றப்படவில்லை எனவும் அவர் குற்றஞ்சாட்டினார். (அ)

## திருவள்ளுவர்...

அண்மையில் நடைபெற்ற எமது கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. அத்துடன் இந்திய தூதுவர் சந்தோஷ் ஜாவை சந்தித்தும் இது தொடர்பில் எமது கரிசனைகளை வெளிப்படுத்தினோம்.

பூர்த்தி செய்யப்பட்ட முழுமையான யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மைய கட்டடம் நேரடியாக யாழ். மாநகர சபைக்கு கையளிக்கப்பட்ட வேண்டும்.

ஆனால் அதன் தளங்கள் மற்றும் பகுதிகள் தொடர்பாகவும், எவ்வாறு அதனை பயன்படுத்துவது தொடர்பான ஆலோசனைக் குழுவை உள்ளூர் மட்டத்தில் நியமிக்கலாம். யாழ்.மாநகர சபை முழுமையாக செய்வதில் சில சிக்கல்களை இருப்பதை நாங்கள் ஒத்துக் கொள்கிறோம்.

இந்திய அரசாங்கமும் இலங்கை அரசாங்கமும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தீர்மானித்தபடி யாழ்.மாநகர சபையிடம் கட்டடத்தை கையளிக்க வேண்டும்.

அந்த கட்டடம் தொடர்பாக கூட்டு முகாமைத்துவ முயற்சிகள் தவிர்க்கப்படவேண்டும் என்பதுடன் அரசாங்கம் எடுத்த முடிவை மீள்பரிசீலனை செய்ய வேண்டும்.

அடுத்த வாரத்தில் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரை சந்தித்து இது தொடர்பில் தெளிவுபடுத்தி கலந்துரையாட இருக்கிறோம் - என்றார். (அ)

## தமிழ் அரசியல்...

கட்டளை 27/2இன் கீழ் கேள்விகளை முன்வைத்து மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை மற்றும் பொறுப்புக் கூறல் விவகாரம் தொடர்பில் அரசாங்கம் தனது நிலைப்பாட்டை உறுதியாக அறிவிக்க வேண்டும். உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் சுரேஸ் சாலேயை கைது செய்துள்ளமை வரவேற்கத்தக்கது. பிள்ளையானை முறையாக விசாரித்தால் உண்மை வெளிவரும் என சாணக்கியன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த நாட்டில் இலட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டு 17 ஆண்டுகள் நிறைவடைந்தும் நீதி கோரி போராடுகிறார்கள். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடந்த வாரம் முழுவதும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நடைபெற்றது. கொழும்பில் இராணுவ வீரர்கள் தின கொண்டாட்டம் நடைபெற்றது.

மக்கள் விடுதலை முன்னணயின் உறுப்பினர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்காமல் இருந்திருந்தால் பலர் இன்று பதவிகளில் இருந்திருக்க முடியாது. தமிழ் அரசியல் கைதிகளுக்கு மாத்திரம் ஏன் இன்றும் அநீதி இழைக்கப்படுகிறது. இதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

தாம் நம்பிக்கை வைத்த அரசியல் கொள்கைக்காகவே அரசியல் கைதிகள் ஆயுதம் ஏந்தி போராடினார்கள். ஆகவே அவர்களை சாதாரண குற்றவாளிகளைப் போன்று பார்க்க முடியாது. இது குறித்து கடந்த காலங்களில் கேள்வியெழுப்பியபோது நாட்டில் அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை என பதிலளிக்கப்பட்டது. ஆனால் அரசியல் கைதிகள் தொடர்பில் தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி கரிசனை கொள்ளவேண்டும்-என்றார். (அ)

## நெடுந்தீவு மக்களின்...

அண்மைக் காலமாக நெடுந்தீவு மக்களுக்கான கடற்போக்குவரத்து சேவையில் ஏற்பட்டுவரும் பல்வேறு இடையூறுகள் மற்றும் நெருக்கடிகள், அதற்கான தீர்வுகள் கிடைப்பதில் ஏற்படும் தாமதங்கள் குறித்து கருத்து கூறுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நெடுந்தீவு மக்களிடம் இருந்து தமக்கான கடல் போக்குவரத்து பிரச்னைளகள் தொடர்பில நாளாந்தம் பல தோலைபேசி அழைப்புகள் என்னிடம் வந்தகொண்டிருக்கின்றன. இந்த பிரச்னை இன்று மட்டுமல்ல அன்று எமது ஆட்சிக் காலத்திலும் இருந்ததுதான்.

ஆனாலும் அன்று இவ்வாறான பிரச்னைகள் வந்தபோது அதற்கான தீர்வுகளை நாம் உடனடியாக ஏதோ ஒரு வகையில் மக்களுக்கு பெற்றுக்கொடுத்திருந்தோம்.

குறிப்பாக தற்போது நெடுத்தீவின் போக்குவரத்து சேவையை பிரதான படகுகளான குமுதினி, வடதாரகை, நெடுந்தாரகை ஆகிய மூன்று படகுகள் மேற்கொண்டு வருகின்றன. ஆனால் அவை மூன்றும் தற்போது பழுதடைந்து திருத்த வேலைகளை எதிர்கொண்டு வருகின்றன.

இதேநேரம், நெடுந்தீவின் போக்குவரத்து சேவையை வீதி அபிவிருத்தி அதிகார சபையே முன்னெடுத்து வருகின்றது. குறிப்பாக எமது ஆட்சிக் காலந்தில் பேசுபொருளாக இருந்த இவ்விடயம், துறைசார் தரப்பினருடன் ஆராயப்பட்டதன் அடிப்படையில் வீதி அபிவிருத்தி அதிகார சபையே தமக்கான கடமைப் பொறுப்பை ஏற்கவேண்டும் என்று நாம் வலியுறுத்தியதன் அடிப்படையில் அவர்கள் அதை ஏற்று இலவசமான போக்குவரத்து சேவையை இன்றுவரை முன்னெடுத்து வந்திருந்தனர்.

ஆனாலும் இன்று குறித்த மூன்று படகுகளும் பழுதடைந்து செயற்பாடற்று இருப்பதால் மாற்று வழியின்றி மக்கள் பல்வேறு அல்லல்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

அந்தவகையில் ஜனாதிபதி இதில் தலையிட்டு கடற்போக்குவரத்து சேவைக்கு குறிப்பாக இந்தக் கடற்பரப்பில் சேவையை முன்னெடுக்கும் ஆற்றலுள்ள படகொன்றை வாடகைக்கு அமர்த்தி மக்களுக்கான சேவையை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான் எமது கோரிக்கையாக இருக்கின்றது. அத்துடன் கடந்த காலத்தில் இவ்வாறான ஏற்பாடுகள் இடம்பெற்றிருக்கின்றன என்பதையும் ஜனாதிபதி கருத்தில் கொள்ளவேண்டும் என்பதையும் நான் நினைவூட்டுகின்றேன்.

அதேபோன்று கூட்டுறவுச் சங்கமும் "தேவா ரதம்" என்ற ஒரு படகு வைத்திருந்தது. அதுவும் தற்போது பழுதடைந்த நிலையிலேயே இருக்கின்றது.

எனவே கொழும்பில் இருக்கும் தேசிய கூட்டுறவு சபையிடம் பரிந்துரைத்து செய்து குறித்த படகை திருத்துவதற்கான ஒரு கடனுதவியையும் பெற்றுக்கொடுக்க வேண்டும் என நான் ஜனாதிபதியிடம் கோருகின்றேன்-என்றார். (அ)

## சர்வதேச நாணய...

நிதியத்திடமிருந்து நிதி கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம். சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபை எமக்கு 700 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கவுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

ஏற்றுமதி மற்றும் வெளிநாட்டுப் பணப்பரிமாற்றங்களுக்கு மேலதிகமாக, பல்தேசிய முகவர் நிறுவனங்களிடமிருந்து கிடைக்கும் வெளிநாட்டு நிதி, நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பை வலுப்படுத்தும் என அவர் விளக்கமளித்தார்.

அதன்படி இந்த ஆண்டிற்குள் 480 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் உலக வங்கி 150 மில்லியன் அமெரிக்க டொலர்களும், பிற இணைந்த நிறுவனங்கள் மூலம் 50 மில்லியன் அமெரிக்க டொலர்களும் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் கூறினார்.

இந்த நிதி வரவுகள் அந்நியச் செலாவணி முகாமைத்துவம் தொடர்பான அச்சத்தைப் போக்கும் என்று குறிப்பிட்ட பிரதி அமைச்சர், இதனை முகாமைத்துவம் செய்வதில் எவ்விதப் பிரச்சினையும் ஏற்படாது என்றும் உறுதியளித்தார். (அ)

## தையிட்டி பவானி வீதி...

கடந்த 11ஆம் திகதி மன்று திகதியிட்டிருந்த நிலையில், நேற்றைய தினம் வழக்கு எடுத்து கொள்ளப்பட்டபோது கட்டளை ஜூன் மாதம் 25ஆம் திகதி வழங்கப்படும் என மன்று திகதியிட்டுள்ளது

தையிட்டி சட்டவிரோத விகாரை அமைந்துள்ள பகுதிக்குள் வலி. வடக்கு பிரதேச சபைக்கு சொந்தமான பவானி வீதி காணப்படுகிறது. குறித்த வீதியை விடுவிக்கும் நோக்குடன் கடந்த ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி வீதி அளவீடு செய்யப்பட்டது.

குறித்த வீதியை மறித்து அடைக்கப்பட்டுள்ள வேலியை விகாராதிபதி அகற்றவேண்டும் எனவும் , தவறும் பட்சத்தில் பிரதேச சபை வேலியை அகற்றும், வேலியை அகற்றும் செலவீனத்தை விகாராதிபதி பிரதேச சபைக்கு வழங்கவேண்டும் என தவிசாளர் கடிதம் மூலம் விகாராதிபதிக்கு அறிவித்து இருந்தார்.

இதனை அடுத்து பிரதேச சபை விகாரை வேலியை அடாத்தாக அகற்ற முற்படுவதாக பலாலி பொலிஸில் விகாராதிபதி முறைப்பாடு செய்திருந்தார்.

முறைப்பாட்டின் பிரகாரம் , தவிசாளரை பலாலி பொலிஸார் அழைத்து, வேலியை அகற்றினால் இனங்களுக்கு இடையில் பிரச்னைகள் ஏற்பட்டு, நல்லிணக்கத்திற்கு பாதிப்பு ஏற்படும். எனவே வேலியை அகற்றும் பணிகளை கைவிட வேண்டும் என அச்சுறுத்தும் தொனியில் கூறியுள்ளனர்.

அதற்கு தவிசாளர், மறுப்பு தெரிவித்து பிரதேச சபைக்கு சொந்தமான வீதியை விகாராதிபதியே அடாத்தாக கையகப்படுத்தி வைத்திருப்பதாகவும், வீதியை விடுவிக்க நடவடிக்கை எடுப்போம் எனவும் உறுதியாக கூறி இருந்தார்.

இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை வலி.வடக்கு பிரதேச சபை வீதியை மீட்கும் பணியை கைவிடவேண்டும் என்றும், அதற்கு எதிராக நீதிமன்று தடையுத்தரவு வழங்க வேண்டும் எனவும் பலாலி பொலிஸார் மல்லாகம் நீதிமன்றில் மனு தாக்கல் செய்தனர்.

குறித்த மனு மீதான விசாரணையின்போது, ஒரு தலைப்பட்சமாக விசாரணை செய்ய முடியாது என கூறிய மன்று, வலி. வடக்கு தவிசாளர் மற்றும் பிரதேச சபை செயலாளர் ஆகியோரை கடந்த 11ஆம் திகதி மன்றில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுத்திருந்தது.

அதன் பிரகாரம் தவிசாளர் மற்றும் பிரதேச சபை செயலாளர் ஆகியோர் அன்றைய தினம் மன்றில் முன்னிலையான நிலையில், அவர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் முன்னிலையாகி தமது தரப்பு வாதங்களை முன்வைத்தார்.

அதனை அடுத்து குறித்த வழக்கின் மீதான கட்டளைக்காக நேற்றைய தினத்திற்கு மன்று திகதியிட்டு இருந்த நிலையில் நேற்று கட்டளையை எதிர்வரும் ஜூன் மாதம் 25ஆம் திகதி வழங்கப்படும் என மன்று திகதியிட்டுள்ளது. (அ)

## தமிழரைத் தேசிய...

தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வலியுறுத்தியுள்ளார்.

தேசிய சமாதான பேரவையின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற மாநாட்டில், சர்வமதத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள், ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான தூதுவர் மற்றும் ஏனைய நாடுகளின் தூதுவர்கள் முன்னிலையில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்-

இலங்கையிலே பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கி விகாரைகள் அமைக்கப்படும் அதேவேளை, ஏனைய மதங்களின் நிலங்கள் குத்தகை அடிப்படையிலேயே வழங்கப்படுகின்றன. நீதிமன்றத் தீர்ப்புகளையும் மீறி குருந்தூர் மலை, வெடுக்குநாறி மலை, நீராவியடி, தையிட்டி, குச்சவெளி ஆகிய இடங்களில் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு பௌத்த விகாரைகள் அமைக்கப்படுகின்றன. குறிப்பாக, குச்சவெளியில் இரண்டு வீதமே சிங்கள மக்கள் வாழும் சூழலில் 36 விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளன.

சவேந்திர சில்வா மற்றும் மகிந்த ராஜபக்ஷ காலத்தில் பறிக்கப்பட்ட வலிகாமம் வடக்கு பல்லாயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் இன்னும் விடுவிக்கப்படாமல் மக்கள் அகதிகளாக வாழ்கின்றார்கள். அண்மையில் மலையகத்தில் நீலகாமம் தோட்ட மக்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டு கொட்டில்கள் உடைக்கப்பட்டுள்ளன. தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் மலையக மக்கள் இன்றும் மாற்றாந்தாய் மனப்பான்மையுடனேயே நடத்தப்படுகின்றார்கள்.

கடந்த மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் திரண்ட மக்களின் கண்ணீரே தமிழ் மக்களின் ஆறாத வடுக்களுக்கு சான்றாகும். 2009இல் அருட்தந்தை பிரான்சிஸ் தலைமையில் சரணடைந்த 56 போராளிகள் உட்பட பல்லாயிரக்கணக்கான காணாமல் ஆக்கப்பட்டோருக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை. முன்னாள் மாகாண சபை அமைச்சர் அனந்தி சசிதரன் தன் கணவனைக் கைகளால் ஒப்படைத்தும் இன்னும் நீதிமன்றில் நீதி கிடைக்கவில்லை.

யுத்த காலத்தில் ஒரு இலட்சத்து 46 ஆயிரம் பேர் காணாமல் போயும் கொல்லப்பட்டும் இருக்கின்றார்கள் என்ற உண்மையான வரலாற்று ஆவணத்தை மன்னாரின் மறைந்த ஆயர் இராயப்பு ஜோசப் நல்லிணக்க ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்தார்.

உள்நாட்டில் நீதி விசாரணை சரியாக நடக்காததால்தான் நாங்கள் ஜெனிவாவை நாட வேண்டியுள்ளது. ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவோ உள்நாட்டில்தான் பேச வேண்டும் என்கின்றார். முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்காக இதுவரை எந்தவொரு சிங்கள தலைவரும் மன்னிப்பு கேட்கும் தைரியத்தை காட்டவில்லை.- என்றார். (அ)

## ஈஸ்டர் ஞாயிறு...

கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த அவர், இந்த ஒட்டுமொத்தச் சம்பவத்தின் "கடைசி நூல்" மக்கள் விடுதலை முன்னணி வசமே உள்ளது என்பது தற்போது தெளிவாகியிருப்பதாகக் குறிப்பிட்டார்.

சிவநேசதுரை சந்திரகாந்தன் எனப்படும் பிள்ளையான் சிறைச்சாலையில் இருந்தபோது, அவரை இரகசியமாகச் சந்தித்தீர்களா என எழுப்பப்பட்ட கேள்விக்கு நாமல் ராஜபக்ஷ பின்வருமாறு பதிலளித்தார்:-

"பிள்ளையானைப் பார்ப்பதற்கு நான் சிறைச்சாலையின் சுவரைத் தாண்டிக் குதிக்கவில்லை. சட்டபூர்வமாக, ஆவணங்களில் கையெழுத்திட்டுத்தான் பார்க்கச் சென்றேன். அந்த நேரத்தில் சிறைச்சாலை அதிகாரி ஒருவரும் அருகில் இருந்தார்.

அது ஊடகங்களிலும் ஒளிபரப்பப்பட்டது. நிலைமை இப்படி இருக்கையில், பொதுமக்களின் பணத்தைச் செலவழித்து பிரான்ஸூக்குச் சென்று, நாமல் பிள்ளையானைப் பார்க்கச் சென்றாரா என்று வாக்குமூலம் எழுதுவது பொதுப் பணத்தை துஷ்பிரயோகம் செய்யும் செயலாகும்."

நல்லாட்சி அரசாங்கக் காலத்தில் பிள்ளையான் அரசியல் கைதியாக வைக்கப்பட்டிருந்தார். நாட்டின் பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வர பிள்ளையான் செய்த அர்ப்பணிப்புக்காக முன்நின்று பேசுவதற்குத் நான் இருமுறை யோசிக்கப் போவதில்லை" என்று கூறினார்.

தற்போதைய அரசாங்கத்தின் விசாரணை முறைகள் குறித்து நாமல் ராஜபக்ஷ கடுமையான விமர்சனங்களை முன்வைத்தார்.

ஞாயிறு தாக்குதலின் கோப்புகளை மூடிமறைத்த அதிகாரிக்கு பதவியுயர்வு வழங்கி, அதே அதிகாரியை அனுப்பி வாக்குமூலம் எழுதி வாங்குவதாக அவர் சாடினார்.

இந்தத் தாக்குதலைத் திட்டமிட்டு நடத்தியவர்களின் பெற்றோர்கள் மக்கள் விடுதலை முன்னணியின் தீவிர உறுப்பினர்கள் என்றும், தாக்குதல் நடத்தியவரின் தந்தை ஜே.வி.பியின் தேசியப் பட்டியலில் இருந்த ஒரு நபர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

"தாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் தங்களிடம் இருப்பதாகக் கூறிய சாட்சிகளை அவர்கள் ஏன் இன்னும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை?" என அவர் கேள்வி எழுப்பினார். (அ)

## பொலிஸ் நிலையத்தில்...

கடந்த 18ஆம் திகதி, விமல் வீரவன்ஸ மற்றும் ஒரு குழுவினர் நினைவுத் தூபி அமைந்துள்ள பகுதிக்குள் அத்துமீறி நுழைந்து, அங்கு கடமையில் இருந்த பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராகக் குற்றவியல் செயற்பாட்டில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# சீமானிடம் அர்ச்சுனா எம்.பி. மன்னிப்பு கேட்கவேண்டும்!

## கலாநிதி இராமதாஸ் தெரிவிப்பு

சென்னை, மே. 22

"ஆயுதம் இருந்திருந்தால் சுட்டிருப்பேன்" எனப் பகிரங்கமாகக் கொலை மிரட்டல் விடுத்து பேசியிருப்பது ஜனநாயக மரபுகளுக்கு முற்றிலும் எதிரானது இராமநாதன் அர்ச்சுனா எம். பி., மன்னிப்பு கேட்கவேண்டும் என்று பா.ம.க. நிறுவனர் கலாநிதி இராமதாஸ் தெரிவித்துள்ளார்.

பா.ம.க. நிறுவனர் கலாநிதி இராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

நம்முடைய தொப்புள்கொடி உறவுகளான ஈழத் தமிழர்கள், தங்களின் அரசியல் உரிமை மற்றும் வாழ்வுரிமைக்காக 75 ஆண்டுகளுக்கும் மேலாகப் பேரிழப்புகளுடன் விடுதலைப் போராட்டத்தை நடத்தினார்கள். போராட்ட காலங்களில் தமிழினம் பின்னடைவைச் சந்தித்ததற்குச் சகோதர யுத்தங்களும் ஒற்றுமையின்மையுமே முதன்மைக் காரணம் என்பதை வரலாறு நமக்கு உணர்த்தியிருக்கின்றது.

இத்தகைய சூழலில், இலங்கை பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா, சமீபத்தில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் தம்பி சீமானை குறிவைத்து, "ஆயுதம் இருந்திருந்தால் சுட்டிருப்பேன்" எனப் பகிரங்கமாகக் கொலை மிரட்டல் விடுத்து, தரக்குறைவாகப் பேசியிருப்பது ஜனநாயக மரபுகளுக்கு முற்றிலும் எதிரானது.

தமிழ்நாட்டில் தமிழ்த் தேசிய அரசியல் வளர்வதைச் சகித்துக்கொள்ள முடியாத தீய சக்திகளின் ஏவலாளியாகச் செயல்பட்டு, தமிழர் ஒற்றுமையைக் குலைக்கத் துடிக்கும் இந்தத் துரோக அரசியலைத் தமிழினம் ஒருபோதும் அனுமதிக்காது. அண்டை நாட்டின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இவ்வாறு பேசுவதைச் சம்பந்தப்பட்ட அரசுகள் வேடிக்கை பார்ப்பது கண்டனத்திற்குரியது.

எனவே, இராமநாதன் அர்ச்சுனா தனது ஜனநாயக விரோதப் பேச்சினை உடனடியாகத் திரும்பப் பெற்று, தம்பி சீமானிடம் தமிழ்நாட்டு மக்களிடமும் பகிரங்க மன்னிப்பு கேட்கவேண்டும் என வலியுறுத்துகிறேன்- என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

### மலையக மக்களுக்கான காணி உரிமை:

# சபையில் விவாதம் கோரும் தமிழ் முற்போக்கு கூட்டணி!

கொழும்பு, மே. 22

மலையக மக்களுக்கான காணி உரிமை தொடர்பில் பாராளுமன்றத்தில் அவசர விவாதமொன்றை நடத்துமாறு சபாநாயகரிடம், தமிழ் முற்போக்குக் கூட்டணி கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையை ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் முற்போக்குக் கூட்டணியின் தலைவர்கள் நேற்று, சபாநாயகரிடம் கையளித்துள்ளனர்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவர்களான பழனி திகாம்பரம் , வி. இராதாகிருஷ்ணன் மற்றும் எதிரணி பிரதம கொறடா கயந்த கருணாதிலக்க ஆகியோர் சபாநாயகர் அலுவலகத்துக்கு சென்று பிரேரணையை ஒப்படைத்தனர். (அ)

# பயணப் பொதியிலிருந்து பெண்ணின் சடலம் மீட்பு!

## கொழும்பில் பரபரப்பு

கொழும்பு, மே. 22

கொழும்பு சீதுவை பகுதியில் உள்ள வீடொன்றின் படுக்கையறையில் காணப்பட்ட பயணப் பொதியிலிருந்து வயோதிப பெண்ணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.


பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் வீட்டுக்கு விரைந்த பொலிஸார் , வீட்டில் தேடுதல் நடத்தியவேளை படுக்கையறையில் இரத்த வெள்ளத்தில் பயணப் பொதி காணப்பட்டுள்ளது

பயணப் பொதியை திறந்தபோது, குறித்த வீட்டில் வசித்து வந்த 79 வயதுடைய மூதாட்டி சடலமாக காணப்பட்டுள்ளார். பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தவேளை , வீட்டில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்புக் கமெராக்கள் அகற்றப்பட்டு இருந்ததுடன் , தொலைபேசி வயர்கள் அறுக்கப்பட்ட நிலையில் காணப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# ஐ.நாவின் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களை வடக்கில் வினைத்திறனுடன் திட்டமிடவேண்டும்

## யு.என்.டி.பி. அதிகாரிகளுடனான சந்திப்பில் ஆளுநர்



யாழ்ப்பாணம், மே. 22

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தால் (யு.என்.டி.பி.) எமது மாகாணத்தில் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களின் உண்மையான தாக்கங்களையும் அதன் அடைவுகளையும் துல்லியமாக மதிப்பீடு செய்வது, எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களை இன்னும் வினைத்திறனான முறையில் திட்டமிட்டு வடிவமைக்கப் பெருமளவில் உதவும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் சுயாதீன மதிப்பீட்டகத்தின் பிராந்திய மதிப்பீட்டு ஆலோசகர் டேவிட் சிலட்டரி மற்றும் மதிப்பீட்டு ஆய்வாளர் கெட்டலினா சலசார் ஆகியோருக்கும் வடக்கு மாகாண ஆளுநர் தலைமையிலான குழுவினருக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று நேற்று வியாழக்கிழமை காலை ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

யு.என்.டி.பி. நிறுவனம் வட மாகாணத்தில் கடந்த காலங்களில் முன்னெடுத்த பல்வேறு சமூக, பொருளாதார மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் தொடர்பான விரிவான மதிப்பீடுகளை மேற்கொள்வதும், அவற்றின் தற்போதைய நிலைப்பாடுகள் மற்றும் அடைவுகளை ஆராய்வதுமே இச்சந்திப்பின் பிரதான நோக்கமாக அமைந்திருந்தது. இதன்போது, கடந்த காலத் திட்டங்களின் படிப்பினைகளைக் கொண்டு எதிர்காலத்தில் மாகாணத்தின் தேவைப்பாடுகளுக்கு அமைய முன்னெடுக்கப்பட வேண்டிய திட்டங்கள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், விவசாய அமைச்சின் செயலாளர் ஆகியோருடன் ஆளுநரின் இணைப்புச் செயலாளரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நாட்டில் மூன்றில் ஒருவருக்கு உயர் இரத்த அழுத்த பாதிப்பு

கொழும்பு, மே. 22

இலங்கையில் மூன்றில் ஒருவர் உயர் இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளார் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

உயர் இரத்த அழுத்தம் பெரும்பாலும் வெளிப்படையான அறிகுறிகளை வெளிப்படுத்துவதில்லை என்றும், எனவே, குறிப்பாக 35 வயதுக்கு மேற்பட்டவர்கள் வழக்கமான மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்வது அவசியம் என்றும் சுகாதார அமைச்சின் தொற்றா நோய்கள் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சிறீனி அழகப்பெரும குறிப்பிட்டார்.

சாத்தியமான சுகாதார அபாயங்களை முன்கூட்டியே கண்டறியும் பொருட்டு, பொதுமக்கள் குறைந்தது ஆறு மாதங்களுக்கு ஒரு முறையோ அல்லது ஆண்டுதோறும் தங்கள் இரத்த அழுத்தத்தைப் பரிசோதித்துக்கொள்ள வேண்டும் என அவர் அறிவுறுத்தினார்.

மேலும், இலங்கையில் உயர் இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களில் 63.9 வீதம் பேர் சிகிச்சை பெறுவதில்லை என்றும், சிகிச்சை பெறுபவர்களில் 39.1 வீதம் பேர் தங்கள் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கத் தவறிவிடுகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார். (அ)

# மகிந்தவுக்கு அல்ல, இனிமேல் ஜனாதிபதி அநுரவுக்கே ஆதரவு

## அம்பிட்டிய சுமணரத்ன தேரர் அறிவிப்பு



மட்டக்களப்பு, மே. 22

மட்டக்களப்புக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவை நேரில் சந்தித்துக் கலந்துரையாடியதை அடுத்து, அவருக்குத் தனது முழுமையான ஆதரவை வழங்குவதாக அம்பிட்டிய சுமணரத்ன தேரர் அறிவித்துள்ளார்.

அத்துடன், தாம் இனிமேல் "ராஜபக்ஷ நிகாய" (ராஜபக்ஷ முகாம்) என்பதில் இருந்து முற்றாக விலகிச் செயற்படப் போவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சந்திப்பின் பின்னர் அவர் வெளியிட்டுள்ள காணொளி அறிக்கை ஒன்றில் இந்த விடயங்களை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதியின் மட்டக்களப்பு விஜயத்தின் போது அவரைத் தொடர்புகொள்ள தாம் முயற்சிப்பதாகவும், அந்த முயற்சி தோல்வியடைந்தால் அடுத்த கட்டமாகத் தாம் ஒரு தீவிரமான நடவடிக்கையை முன்னோக்கி எடுக்கப் போவதாகவும் முன்னதாக ஒரு செய்தியைப் பகிர்ந்திருந்ததாகத் தேரர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியைச் சந்திப்பதற்கான வாய்ப்பு தமக்குக் கிடைக்கும் என்று தாம் ஆரம்பத்தில் எதிர்பார்க்கவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

தமது முந்தைய செய்தியை அடுத்து, சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் மற்றும் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் அதிகாரிகள் தலையிட்டு, ஜனாதிபதியுடனான சந்திப்புக்குரிய ஏற்பாடுகளைச் செய்துகொடுத்ததாகத் தேரர் தெரிவித்தார்.

இதன் மூலம் இரு தரப்பினருக்கும் இடையில் சுமுகமான கலந்துரையாடலை நடத்த வழிவகை செய்யப்பட்டது.

இந்தச் சந்திப்பின்போது, கிழக்கு மாகாணம் எதிர்நோக்கும் பல முக்கிய பிரச்சினைகள் மற்றும் கவலைகள் குறித்துத் தாம் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு சென்றதாகவும், அவற்றுக்கு உரிய தீர்வுகளை வழங்குவதற்குக் காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என ஜனாதிபதி தமக்கு உறுதியளித்ததாகவும் தேரர் குறிப்பிட்டுள்ளார். நாட்டை நேர்மறையான மற்றும் சாதகமான திசையை நோக்கிக் கொண்டு செல்வதற்கு ஜனா திபதி எடுக்கும் அனைத்து முயற் சிகளுக்கும் தாம் தயாராக இருப்ப தாகக் குறிப்பிட்ட தேரர், ஜனாதி பதி பதவியில் இருக்கும் காலம் வரை அவருக்குத் தனது "அதிகபட்ச ஆதரவை" வழங்கவுள்ளதாகவும், "ராஜபக்ஷ நிகாய"விலிருந்து தாம் விலகியிருக்கப் போவதாகவும் பகிரங்கமாகப் பிரகடனப் படுத்தியுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.05.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.